THE HINDU
7 JULY 2018
PAGE 2

# Mindset change must for women's safety: VP

## Mere legislation not enough to curb crimes against women, says Venkaiah Naidu

SPECIAL CORRESPONDENT
PUDUCHERRY

Vice-President Venkaiah Naidu on Friday said that bringing in legislation alone was not sufficient to prevent crimes against women and emphasised that the mindset of people had to change to ensure gender equality and safety of women.

"Some of the recent incidents of crime against women are shameful and a matter of serious concern. Crimes against women and children are highlighted in newspapers and television channels as if it is a heroic act though the incident should be isolated and action taken locally," he said while addressing the faculty and students of Pondicherry University.



Vice-President Venkaiah Naidu with Chief Minister V. Narayanasamy and Lt. Governor Kiran Bedi at a function at Pondicherry University on Friday. • S. S. KUMAR

"We cannot do it simply by bringing in a legislation. Mere bill is not going to solve the problem. What is required is will and administrative skill to kill the social evil. We all have to act collectively to raise our voice and awareness against discrimination of the girl child. The mindset of the people must change.

"We must make our youngsters to respect women, fellow students and treat them with respect. There should be renewed focus on gender equality and safety of women. And this gender sensitisation must begin at home and continue in schools, colleges and universities," Mr. Naidu said.

With the country having the unique advantage of 65% of the total population under 35 years of age, the need of the hour is to fully tap the potential of the human capital by ensuring that they have the knowledge and skills required for the 21st century world.

Simultaneously, we must ensure that there are enough opportunities for them to start new enterprises and start new jobs.

Mr. Naidu pointed out that while the government was already focusing on programmes like Skill India and Start Up India, universities had an onerous responsibility to create new courses and improve the teaching and learning processes to make the students ready to take on these challenges.

### Job skills

Although lakhs of students were passing out of the portals of our higher educational institutions each year, majority of them were lacking in employable skills.

Education should bring out the best in man and lead to his enlightenment and empowerment. It is an instrument for socio-economic transformation of the individuals and the society at large.

Education is the process of continuous learning and does not end with the acquisition of a degree. It must inculcate strong moral and ethical values and facilitate the holistic development of an individual.

"My advice to all of you is to dream big and aim high. Think that the whole world of knowledge is open to you. You master the basic well and move to acquire higher competencies. Learning must be fun, enjoyable. It must be a constant source of pleasure rather than being a drudgery and a burden you fell like getting rid of," he said.

The Vice-President also said that language and tradition go together and ideas and thoughts could be better explained in one's mother tongue. He recalled that during his recent visit to the Latin American countries such as Peru, Guatemala and Panama, he found that the locals had forgotten their native language.

"In India also there are reports of local languages vanishing slowly. This is not a good thing. Mother tongue is like our eyes and other languages are like our spectacles. I want all Indian universities and teaching in India including science, technology and medicine to be taught in their respective languages. Students should master their mother tongue and learn as many as languages as possible."

There is also the need to improve the quality of education in the Indian universities. The faculty must be constantly learning and help students to access new resources and update the knowledge base

"We should reorient our teaching in a way that it brings out the latent talents of the students. We need to turn our universities into global centres of excellence in innovation and research. Like in ancient times when India was known as 'Vishwaguru', our universities must attract knowledge seekers from all over the world. To achieve this, the professional competence of teachers have to be enhanced in a significant manner," he said.

Lieutenant Governor Kiran Bedi, Chief Minister V. Narayanasamy, Vice-Chancellor Gurmeet Singh, I.V. Subba Rao, secretary to the Vice-President participated.

DINAKARAN 7 JULY 2018 PAGE 3

### அரசியல்வாதிகள் பணம் சம்பாதிப்பதை நோக்கமாக கருதக்கூடாது

# சட்டத்தால் மட்டுமே குற்றங்களை குறைக்க முடியாது






## துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு பேச்சு

### கடின உழைப்பு வெற்றியை கொடுக்கும்

### பீட்சாவும், பர்கரும் உடம்பை கெடுக்கும்

DINAMALAR
7 JULY 2018
PAGE 1

# தாய் மொழியிலேயே உயர் கல்வி பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும்

## துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு பேச்சு

புதுச்சேரி, ஜூலை 7–

நாட்டில் மருத்துவம், பொறியியல் என அனைத்து பாடங்களும் தாய் மொழியில் கற்பிக்கப்பட வேண்டும். என, துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு பேசினார்.

புதுச்சேரி பல்கலைக் கழகத்துக்கு துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு நேற்று வருகை தந்தார். பின், பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத் சிங், டீன்களுடன், பல்கலைகழக வளர்ச்சி குறித்து கலந்துரையாடினர்.நிகழ்ச்சியில் கவர்னர் கிரண் பேடி, முதல்வர் நாராயணசாமி,ஜனாதிபதியின் தனி செயலர் சுப்பராவ்கோகு கிருஷ்ணன் எம்.பி.,பல்கலைக்கழக பதிவாளர் சசிகாந்த தாஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் பல்கலைக்கழக ஜவஹர்லால் நேரு கலையரங்கில் மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில்துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு பேசியதாவது:

உலக அளவில் இந்தியா பொருளாதாரத்தில் முக்கிய இடத்தை பிடித்துள்ளது.இதனால் தான் நமது பிரதமர் சீர்திருத்தம், செயலாக்கம், மாற்றம் என அழைப்பு விடுத்துள்ளார். உலக அளவில் இந்திய பொருளாதாரம் 7 சத வீத்திற்கு மேல் உள்ளது. அடுத்த 15 ஆண்டுகளில், பொருளாதார ரீதியாக மூன்றாவது நாடாக இந்தியா இருக்கும்.

நமது நாட்டில் 65 சத வீத மக்கள் 35வயதிற்கு உட்பட்ட இளைஞர்களாக உள்ளனர். உலகம் வேகமாக மாறிக்கொண்டுள்ளது. அதற்கேற்ப நமது இளைஞர்கள் புதிய திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். புதிய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, பலருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி தருபவர்களாகவும் இருக்க வேண்டும்.

இதனால், இந்தியாவில் ஸ்கில் இந்தியா, ஸ்டாட் அப் இந்தியா என்ற இரண்டு திறன் மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. பல்கலைகழகங்கள் இதற்கேற்ப புதிய பாடப்பிரிவுகளை ஆரம்பித்து, செயல்படுத்த வேண்டும். லட்சக்கணக்கான மாணவர்கள் கல்வி நிறுவனங்களில் இருந்து படித்து வெளியே வந்த போதிலும், வேலைவாய்ப்பிற்கான திறன்கள் அவர்களிடம் இல்லை என்பதை நாம் உற்று நோக்க வேண்டும். கல்வி நிறுவனங்கள் அனைத்து திறன்களையும் உள்ளடக்கிய சிறந்த மனிதனை வெளியே அனுப்ப வேண்டும்.

இந்தியாவிற்கு தனி கலாசாரம், பண்பாடு உண்டு. கல்வி என்பது வேலைக்காக மட்டுமல்ல. கல்வி கற்பிற்கும் முறை எளிதாக இருக்க வேண்டும். வாழ்க்கை முழுவதும் கற்றுக்கொண்டே இருங்கள்.

சம்பாதிக்கவேண்டும் என்று ஓடிக்கொண்டு இருக்க கூடாது. இது அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும். நாம் மேற்கத்திய உணவுகளை நோக்கி ஓடுகிறோம். பாக்கெட்களில் அடைக்கப்பட்ட உணவு உடலிற்கு நல்லதல்ல.

நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் அவரவர் கடமையை செய்தால், இன்னும் 15 ஆண்டுகளில் இந்தியா உலக பொருளாதாரத்தில் முதலிடத்தை பிடிக்கும். ஜனநாயக நாட்டில் மக்கள்தான் நமது எஜமானர்கள். அவர்களை காத்திருக்க வைக்க கூடாது.

தகவல் தொழில்நுட்பத்தை படிப்பில் மட்டுமல்ல மக்கள் வாழ்க்கைக்கும் கொண்டு வர வேண்டும். அனைத்தும் ஆன்லைனில் கொண்டு வந்தால், மக்கள் வரிசையில் நிற்க வேண்டியது

தொடர்ச்சி 12ம் பக்கம்

### தமிழில் பேசிய துணை ஜனாதிபதி

துவக்கத்தில் சில நிமிடங்கள் தமிழில் பேசி, துணை ஜனாதிபதி மாணவர்களின் பாராட்டை பெற்றார். தமிழை நன்றாக புரிந்து கொள்வேன். ஆனால் நீண்ட நேரம் பேச முடியவில்லை. அதனால் ஆங்கிலத்தில் பேச வேண்டியுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

### ரூ. 300 கோடி கேட்டது பல்கலைக்கழகம்

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் வேந்தர் துணை ஜனாதிபதியாவார். பொறுப்பேற்ற பிறகு முதல் முறையாக புதுச்சேரி வந்த துணை ஜனாதிபதி வெங்கையா நாயுவிடம், பல்கலைக்கழக வளர்ச்சிக்கு தேவையானவற்றை 20 நிமிடங்கள் துணைவேந்தர் குர்மீத் சிங் பட்டியலிட்டார்.

பல்கலைக்கழக உள்கட்டமைப்பு, வளர்ச்சி பணிக்கு 300 கோடி தேவைப்படுகிறது. இதனை பெற்றுதர வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

DINAMALAR

7 JULY 2018

PAGE 1



புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் உள்ள ஜவஹர்லால் நேரு கலையரங்கில், மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றும் முன், விழாவை துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

# தாய் மொழியிலேயே

3ம் பக்கத் தொடர்ச்சி

இருக்காது. நிர்பையா நிகழ்வு நாட்டிற்கு எதிர்பாராத ஒன்று.

800 பல்கலைக்கழகங்களில் ஒரு சில மட்டுமே சர்ச்சையில் சிக்குகின்றன. ஒழுங்கீன செயல்களில் ஈடுபட பல்கலைக்கழகம் இடமல்ல. சட்டம் கொண்டு வருவதால் மட்டுமே குற்றத்தை தடுத்து விட முடியாது. . மாற்றம் மக்களிடம் வர வேண்டும். கல்வியில் மாற்றம் வேண்டும். பெண்களை மதிக்க சிறுவயதிலேயே கற்றுத்தர வேண்டும்.

வீட்டில், உங்கள் தாய்மொழியை புரிந்து கொள்ளும் இடங்களில் தாய்மொழியையே பேசுங்கள். மற்ற இடங்களில் வேண்டுமானால் வேறு மொழியை பயன்படுத்துங்கள். கற்றுக் கொடுத்த ஆசியர்களை என்றும் மறவாதீர்கள். தாய்மொழி கண்களை போன்றது. மற்ற மொழி கண்ணாடியை போன்றது. தேவையான நேரத்தில் மட்டும் கண்ணாடி அணிய வேண்டும். வாழ்க்கையில் தாய், பிறந்த மண், தாய்மொழி, தாய்நாடு, குரு ஆகிய ஐந்தும் தான் முக்கியம். இந்தியாவில் மருத்துவம், பொறியியல் என அனைத்து பாடங்களும் தாய் மொழில் கற்பிக்கப்பட வேண்டும். இதுவே என்னுடைய எண்ணம்.

எண்ணம் நிறைவேறும் வரை கடுமையாக உழையுங்கள். பிரகாசமான எதிர்காலம் உள்ள நிலையில் வாழ்க்கையை வீணடிக்க வேண்டாம். கற்கும் நேரங்களை தவிர சமூகத்தை பற்றி அறிந்து கொள்ள நேரத்தை செலவிடுங்கள். கிடைக்கும் நேரங்களில் கிராமங்களில் கல்வி பணி மேற்கொள்ளுங்கள் தூய்மை இந்தியாவை உருவாக்குவதற்கு எண்ணுங்கள்.

இந்தியாவின் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் பேணி காப்பது இளைஞர்களின் கடமை. இவ்வாறு துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு பேசினார்.

## மாட்டுக்றி உண்ணும் திருவிழா

பல்கலைக்கழகங்கள் தொடர்ந்து சர்ச்சையில் சிக்கி வருவதற்கு கவலை தெரிவித்த துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, உணவு ஒவ்வொருவரின் உரிமை. விருப்பம்படி எந்த உணவினையும் சாப்பிடலாம். ஆனால் பல்கலைக்கழகம் கல்வி கற்றும் தரும் இடம். அந்த இடத்தில் மாட்டிறைச்சி உண்ணும் திருவிழாவை நடத்தி, பிறரின் எதிர்ப்பினை எதிர்கொள்ள வேண்டுமா என கேள்வி எழுப்பினார்.

## ஆங்கிலத்தில் அடுக்கு மொழி

துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, ஆங்கிலத்தில் அடுக்கு மொழியில் பேசி அசத்தினார். இதனை பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள் கைத்தட்டி உற்சாகமாக வரவேற்றனர்.

## பல்கலையில் அரவிந்தர் இருக்கை

விழாவில் அரவிந்தரின் ஆன்மிக சேவைகளை நினைவு கூர்ந்த துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் அரவிந்தர் பெயரில் இருக்கை ஏற்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

THE HINDU (TAMIL)
7 JULY 2018
PAGE 7

# இந்தியாவில் சில மொழிகள் அழிவது வேதனை அளிக்கிறது

● தாய்மொழியை காக்க இளைஞர்களுக்கு குடியரசு துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு வேண்டுகோள்

■ புதுச்சேரி

இந்தியாவில் சில மொழிகள் அழிந்து வருவது வேதனை அளிக்கிறது. இளைஞர்கள் தங்கள் தாய்மொழியை மறந்து வருகின்றனர். இதைத் தடுக்க ஒவ்வொருவரும் அவரவர் தாய்மொழியில் பேச வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு வலியுறுத்தினார்.

வெங்கய்ய நாயுடு நேற்று காலை சென்னையில் இருந்து தனி ஹெலிகாப்டரில் புதுச்சேரி லாஸ்பேட்டை விமான நிலையம் வந்தடைந்தார். அவரை புதுச்சேரி அரசு சார்பில் துணை நிலை ஆளுநர் கிரண்பேடி, முதல்வர் நாராயணசாமி, சபாநாயகர் வைத்திலிங்கம், அமைச்சர்கள் உள்ளிட்டோர் வரவேற்றனர். பின்னர் அங்கிருந்து கார் மூலம் புதுவை மத்தியப் பல்கலைக்கழகத்துக்கு வெங்கைய்ய நாயுடு சென்றார்.

பின்னர் ஜவஹர்லால் நேரு கலையரங்கில் மாணவ - மாணவிகள், பேராசிரியர்கள் மத்தியில் உரையாற்றினார். அப்போது அவர் பேசியது:



▲ புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் இடையே உரையாற்றுகிறார் குடியரசு துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு.

**ஒரே உலகம் ஒரே குடும்பம்**

'ஒரே உலகம் ஒரே குடும்பம்' அதுவே நம் நாட்டின் பாரம்பரியம். பிரதமரின் விருப்பப்படி நாட்டில் தரமான சீர்திருத்தங்கள் மூலம் மாற்றங்களை கொண்டு வரவேண்டும்.

நமது நாட்டில் 65 சதவீத மக்கள் 35வயதுக்கு உட்பட்ட இளைஞர்களாக உள்ளனர். 'இந்தியர்' என்பதில் இளைஞர்கள் அனைவரும் பெருமை கொள்ள வேண்டும். புதிய திறமைகளையும் அறிவுத் திறனையும் இளைஞர்கள் வளர்த்துக் கொண்டே இருக்க வேண்டும்.

இந்தியாவை உலகமே கண்காணித்துக் கொண்டிருக்கிறது. அடுத்த 15 ஆண்டுகளில் இந்தியா உலகளவில் பொருளாதாரத்தில் மூன்றாவது இடத்திலுள்ள நாடாக மாற வாய்ப்புகள் உள்ளன. இளைஞர்கள் அனைவரும் பொருளாதாரம், வேலை வாய்ப்பு, தரமான வாழ்வை வாழ்வதற்கான சூழலை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

'கல்வி' என்பது வேலைக்காக மட்டுமல்ல. ஒவ்வொருவரும் தங்கள் கனவையும் குறிக்கோளையும் பெரிதாக எண்ணுங்கள். படிப்பதை சிரமமாக கொள்ளாமல் மகிழ்வுடன் படியுங்கள். கல்வி கற்பிக்கும் முறை எளிதாக இருக்க வேண்டும். அப்போது தான் மாணவர்கள் விரும்பி படிப்பார்கள். வாழ்க்கை முழுவதும் கற்றுக்கொண்டே இருங்கள். 'சம்பாதிக்க வேண்டும்' என்றே ஓடிக் கொண்டு இருக்காதீர்கள்.

**தாய்மொழியை தவிர்க்காதீர்**

இந்தியாவில் சில மொழிகள் அழிந்து வருவது வேதனை அளிக்கிறது. இதைத் தடுக்க ஒவ்வொருவரும் அவரவர் தாய்மொழியைப் பேச வேண்டும்.

வீட்டில் அனைவரும் தாய்மொழியில் பேசுங்கள். உங்கள் தாய்மொழியைப் புரிந்துகொள்ளும் இடங்களில் தாய்மொழியையே பேசுங்கள். வெளிநாடு சென்ற இளைஞர்கள் தங்களது தாய்மொழியை மறந்து வருகின்றனர். 'அம்மா, அப்பா' என தாய்மொழியிலேயே அழையுங்கள்.

வாழ்க்கையில் தாய்-தந்தை, பிறந்த மண், தாய்மொழி, தாய்நாடு, குரு ஆகிய இந்த ஐந்தும் மிக முக்கியமானவை.

**வாழ்வை வீணடிக்காதீர்கள்**

இந்திய பல்கலைக்கழகங்களில் ஒருநாள் பொறியியல், மருத்துவம், கலை, அறிவியல் உட்பட அனைத்து படிப்புகளையும் அந்தந்த தாய்மொழியில் கற்று தர வேண்டும் என்பது என் விருப்பம். இந்தியாவில் தாய்மொழியில் அனைத்து பாடங்களும் வர வேண்டும்.

உங்கள் எண்ணம் நிறைவேறும் வரை கடுமையாக உழையுங்கள். கற்கும் நேரங்களை தவிர சமூகத்தை பற்றி அறிந்து கொள்ள நேரத்தை செலவிடுங்கள்.

கிடைக்கும் நேரங்களில் கிராமப்புறங்கள் சென்று கல்வி கற்பியுங்கள். 'தூய்மை இந்தியா'வை உருவாக்குவதற்கு எண்ணுங்கள்.

இவ்வாறு குடியரசு துணைத் தலைவர் பேசினார்.

CH-PY_M

DINAMANI

7 JULY 2018

PAGE 5

# தாய் மொழியில் கல்வி கற்கும் நிலை வர வேண்டும்

## குடியரசுத் துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு




கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேசிய குடியரசுத் துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு. உடன் புதுவை துணைநிலை ஆளுநர் கிரண் பேடி, முதல்வர் வே.நாராயணசாமி, பல்கலைக்கழகத் துணைவேந்தர் குர்மீத் சிங் உள்ளிட்டோர்.

**புதுச்சேரி, ஜூலை 6:** நாட்டில் அவரவர் தாய் மொழியில் கல்வி கற்கும் நிலை வர வேண்டும் என்று குடியரசுத் துணைத் தலைவர் எம்.வெங்கய்ய நாயுடு வலியுறுத்தினார்.

புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவ, மாணவிகள் இடையே அவர் பேசியதாவது:

புதுச்சேரி கலாசாரம் மற்றும் ஆன்மிக பூமியாகத் திகழ்கிறது. உலகம் ஒரே குடும்பம் என்பதுதான் நமது நாட்டின் பண்பாடு.

இணையதளம் மூலமாகத் தேர்வுகளை நடத்தினால் எளிதாக இருக்கும். பல்கலையின் அனைத்து நடவடிக்கைகளும் வெளிப்படைத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். அப்போதுதான் மக்கள் அனைத்தையும் அறிந்து கொள்ள முடியும்.

நமது நாட்டின் மக்கள் தொகையில் 65 சதவீதம் பேர் 35 வயதுக்கு உள்பட்டவர்கள். இளைஞர்களின் சக்திதான் இந்தியாவின் பலம்.

உலகமே இந்தியாவைக் கண்காணித்துக் கொண்டிருக்கின்றது. நாம் புதிய திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கல்வி பயில்வது வேலைக்காக மட்டுமல்ல. முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் கூறியதுபோல, ஒவ்வொருவருக்கும் கனவும், குறிக்கோளும் இருக்க வேண்டும். வாழ்க்கை முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்.

இளைஞர்கள் கல்வியில் ஆர்வம் மிக்கவர்களாக இருக்க வேண்டும். மாணவர்கள் மட்டுமல்ல; ஆசிரியர்களும் தொடர்ந்து கற்க வேண்டும். பணம் சம்பாதிப்பதை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளக் கூடாது. இது அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும்.

தற்போது நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சி 7 சதவீதமாக உள்ளது. நாட்டில் உள்ள அனைவரும் அவரவர் கடமையைச் சரியாகச் செய்தால், இன்னும் 15 ஆண்டுகளில் நமது நாடு உலகப் பொருளாதாரத்தில் 3-ஆவது இடத்தைப் பிடிக்கும். பெண் குழந்தைகளுக்கு எதிராக அண்மைக் காலமாக நடைபெற்று வரும் வன்முறைச் சம்பவங்களை ஏற்றுக் கொள்ள முடியாது. இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்க நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டு வந்துவிட்டால் மட்டும் போதாது; மக்களிடமும் மாற்றம் வர வேண்டும். பெண்களை மதிக்க சிறு வயதில் இருந்தே கற்றுத் தர வேண்டும். நாடு முழுவதுமுள்ள 800 பல்கலைக்கழகங்களில் 4 அல்லது 5 பல்கலைக்கழகங்களே சர்ச்சையில் சிக்குகின்றன. பல்கலைக்கழகம் என்பது கல்வி கற்கும் இடமாக மட்டுமே இருக்க வேண்டும். அப்சல் குருவின் பிறந்த நாளைக் கொண்டாடுவது, கறி விருந்து நிகழ்ச்சி நடத்துவது போன்ற செயல்களில் மாணவர்கள் ஈடுபடக் கூடாது.

இந்தியாவில் சில மொழிகள் அழிந்து வருவது வேதனை அளிக்கிறது. இதைத் தடுக்க ஒவ்வொருவரும் அவரவர் வீடுகளில் தாய் மொழியில் பேச வேண்டும். தாய் மொழி என்பது நமது கண்களைப் போன்றது.

மற்ற மொழிகள் கண்ணாடியைப் போன்றது. தேவையான நேரத்தில் மட்டுமே கண்ணாடியை அணிய வேண்டும். அறிவியல், சட்டம், மருத்துவம் உள்ளிட்ட அனைத்துப் பாடங்களையும் அவரவர் தாய் மொழியில் கற்கும் நிலை வர வேண்டும்.

பல்கலைக்கழகங்கள் கிராமங்களைத் தத்தெடுத்து கல்வி, சுகாதாரம் குறித்து பயிற்சி அளிக்க வேண்டும்.

புதுவை பல்கலையில் அரவிந்தர் பெயரில் இருக்கை உருவாக்க மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்துக்கு பரிந்துரை செய்யப்படும் என்றார் அவர்.

முன்னதாக, பல்கலைக்கழக ஆட்சிக் குழுக் கூட்டத்திலும் வெங்கய்ய நாயுடு பங்கேற்றார். நிகழ்ச்சியில் புதுவை துணைநிலை ஆளுநர் கிரண் பேடி, முதல்வர் வே.நாராயணசாமி, பல்கலைக்கழகத் துணைவேந்தர் குர்மீத் சிங், பதிவாளர் சசிகாந்ததாஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

Pondy Times
July 07- 13, 2018
Page 1

# வீடுகளில் தாய்மொழியில் பேசுங்கள்; ஆங்கிலத்தில் பேசாதீர்கள்
## புதுவைப் பல்கலை. மாணவர்களிடம் குடியரசுத் துணைத் தலைவர் வேண்டுகோள்



புதுச்சேரிக்கு ஒரு நாள் பயணமாக குடியரசுத் துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு ஜூலை 6ம் தேதி காலை வந்தார். புதுவை விமான நிலையத்தில் இருந்து புதுவை பல்கலைக்கழகம் சென்ற அவர் அங்குள்ள மாணவர்களிடம் கலந்துரையாடினார். அதன் பிறகு அவர்கள் முன்பு பேசும்போது, வீடுகளில் ஆங்கிலத்தில் பேசி வருவது கவலை அளிக்கிறது என்றும் அவரவர் தாய் மொழியில் பேசி இந்திய நாட்டின் கலாச்சாரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மாணவர்களுக்கு உயர்ந்த நோக்கங்களும், லட்சியக் கனவுகளும் இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். மாணவர்களிடம் அவர் மேலும் பேசியதாவது:

புதுச்சேரி பல்கலைக் கழகம் அகில இந்திய அளவில் 13வது இடத்தில் இருப்பது பெருமைக்குரியதாகும். பொருளாதாரத்தில் வளர்ந்த நிலையில் சென்று கொண்டிருக்கும் சூழலில் மாற்றத்திற்கான ஆர்வத்துடன் செயல் படுவது மிக அவசியம். பிரதமர் மோடியின் விருப்பப்படி சீர்திருத்தங்கள் வழியாகவும் தரமான செயல்கள் மூலமாகவும் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்றால், ஒவ்வொரு கல்வி நிறுவனமும் முன்னேற்றத்திற்கு வாய்ப்புள்ள வழிகளில் செயல்பட்டு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.

ஆக்கப்பூர்வமாகவும், திறனோடும், பயனுள்ள வகையிலும் செயல்படும்போதுதான் நாம் முன்னேறுகிறோம். மக்களிடம் எளிய முறையில் பழகி அவர்களிடம் நல்லுறவை வளர்த்துக்கொண்டு அவர்களின்

தொடர்ச்சி... 2ம் பக்கம் பார்க்க

Pondy Times
July 07- 13, 2018
Page 2



## வீடுகளில் தாய்மொழியில்..

1ம் பக்க தொடர்ச்சி...

தேவையை அறிந்து கொள்வதன் மூலம் நம்மால் சிறப்பாக சேவை செய்ய முடியும். அடுத்த பத்தாண்டுகளில் இந்தியா உலகின் மிக வலுவான பொருளாதார நாடுகள் பட்டியலில் மூன்றாவது இடத்திற்கு வரும் வாய்ப்புகள் இருக்கின்றன. இத்தகைய சூழலில் நமது இளைஞர்கள் தரமான வாழ்க்கையை வாழ்வதற்கான சூழலை உருவாக்க வேண்டும். அப்போதுதான் நாம் எதிர்பார்க்கும் வளர்ச்சியைப் பெற முடியும்.

திறன் - இந்தியா, வளமான இந்தியா போன்ற அரசின் திட்டங்களைக் கருத்தில் கொண்டு அதற்கேற்ப புதிய பாடத் திட்டங்களை உருவாக்கி மாணவர்களுக்குக் கற்றுத் தர வேண்டும். அதற்கான திறன்களை ஆசிரியர்களும் மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

மாணவர்களால் தங்கள் முன் உள்ள சவால்களை எளிதாக சமாளித்து வெற்றிகொள்ள முடியும். மாணவர்களுக்கு மிக உயர்ந்த நோக்கங்களும், லட்சியக் கனவுகளும் இருக்க வேண்டும். அதே சமயத்தில் கற்றுக்கொள்வது என்பது மகிழ்வானதாகவும் இருக்க வேண்டும்.

மாறி வரும் சூழலில் உலகத் தரத்திற்கு ஏற்ப மாணவர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு பல்கலைக்கழகங்களுக்கு இருக்கிறது. அப்போதுதான் மாணவர்கள் சமகாலத் தேவைகளை எதிர்கொள்ளும் ஆற்றல்கள் கொண்டவர்களாக மாறுவர். படிப்பு முடிந்தவுடன் மாணவர்கள் தாய் நாட்டிற்காக சேவை செய்ய முன்வர வேண்டும். அதற்குப் பதிலாக வெளி நாடுகளுக்குச் சென்றுவிடக் கூடாது. வீடுகளில் அனைவரும் ஆங்கிலத்தில் பேசப் பழகி வருகின்றனர். அவரவர் தாய் மொழியில் பேச வேண்டும். அப்போதுதான் நாட்டின் கலாச்சார மேன்மைகள் பாதுகாக்கப்படும். மாணவர்கள் தங்களது தனித்துவமான அடையாளங்களை வளர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். எந்த சூழலில் இருந்து வந்தாலும் மாணவர்களுக்கு நல்ல எண்ணங்களும், வாழ்வில் உயர மிக உயர்ந்த நோக்கங்களும் இருக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் கவர்னர் கிரண்பெடி, முதல்வர் நாராயணசாமி, கோகுல கிருஷ்ணன் எம்.பி. குடியரசுத் தலைவரின் முதன்மைச் செயலர் சுப்பாராவ், புதுச்சேரி அரசின் தலைமைச் செயலர் அஸ்வினி குமார், கல்வித் துறைச் செயலர் அன்பரசு, காவல் துறைத் தலைவர் சுந்தரி நந்தா, புதுச்சேரி பல்கலைக்கழக பதிவாளர் சசிகாந்த தாஸ், நிதி அதிகாரி பிரகாஷ், தேர்வுக் கட்டுப்பாட்டு ஆணையர் (பொறுப்பு) டாக்டர் சித்ரா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

DINA THANTHI
7 JULY 2018
PAGE 7




புதுவை பல்கலைக்கழகத்தில் நடந்த கலந்துரையாடலில் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு பேசிய போது எடுத்த படம். அருகில் கவர்னர் கிரண்பெடி, முதல்–அமைச்சர் நாராயணசாமி, பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மித்சிங் ஆகியோர் உள்ளனர்.

'மம்மி'யைவிட அம்மா என்பது உணர்ச்சிபூர்வமாக இருக்கும்

# எத்தனை மொழிகளை கற்றாலும் தாய் மொழியை மறந்து விடாதீர்கள்

## புதுவை மாணவர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் வெங்கையா நாயுடு பேச்சு

புதுச்சேரி, ஜூலை.7–

மம்மியை விட அம்மா என்று கூறும்போது உணர்வுபூர்வமாக இருக்கும். எத்தனை மொழிகளை கற்றாலும் தாய் மொழியை மறந்து விடாதீர்கள் என்று புதுவை பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் துணை ஜனாதிபதி வெங்கையாநாயுடு கூறினார்.

### கலந்துரையாடல்

பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக துணை ஜனாதிபதியும், புதுவை பல்கலைக்கழக வேந்தருமான வெங்கையா நாயுடு ஹெலிகாப்டர் மூலம் சென்னையில் இருந்து புதுச்சேரிக்கு நேற்று காலை வந்தார். அங்கு அளிக்கப்பட்ட வரவேற்பை ஏற்றுக் கொண்டு மாணவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக புதுவை பல்கலைக்கழகத்துக்கு சென்றார்.

அங்குள்ள ஜவகர்லால் நேரு கலையரங்கத்தில் நடந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மித்சிங் வரவேற்றுப் பேசினார். இதில் துணை ஜனாதிபதி வெங்கையாநாயுடு பேசியதாவது:–

### தனித்தன்மை கொண்ட இடம்

கடந்த 1–ந் தேதி எனது பிறந்த நாள். நான் எனது பிறந்த நாளை கொண்டாடுவதில்லை. அதேபோல் ஆங்கில புத்தாண்டையும் கொண்டாடுவது இல்லை. இதை பெரிய நிகழ்வுகளாக நான் கருதாதது தான் இதற்கு காரணம். புதுச்சேரி ஒரு சிறந்த மாநிலம். உலகப் புகழ் பெற்ற தனித்தன்மை கொண்ட இடம்.

நான் துணை ஜனாதிபதியாக மட்டுமில்லாமல், பல்கலைக்கழக வேந்தராகவும் இருப்பதால் இந்த பல்கலைக்கழகத்திற்கு தேவையானவற்றை செய்து தரும் பொறுப்பு எனக்கு உள்ளது. புதுச்சேரி பல்கலைக்கழகம் எதிர்காலத்தில் வளமாகத்தான். ஒவ்வொருவரும் தங்களுடைய கனவையும், குறிக்கோளையும் பெரிதாக எண்ண வேண்டும். படிப்பதை சிரமமாக கொள்ளாமல் மகிழ்ச்சியுடன் படியுங்கள். கல்வி கற்பிற்கும் முறை எளிதாக இருக்க வேண்டும். அப்போது தான் மாணவர்கள் விருப்பமுடன் படிப்பார்கள். மாணவர்கள் தங்களுக்கு முன்பு உள்ள சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெற வேண்டும்.

வாழ்க்கை முழுவதும் கற்றுக்கொண்டே இருங்கள். சம்பாதிக்க வேண்டும் என்று ஓடிக்கொண்டு இருக்காதீர்கள். பல வெளிநாட்டு உணவுகள் நமது நாட்டிற்கு வந்தாலும் நமது நாட்டில் தயாரிக்கப்படும் பாரம்பரிய உணவான இட்லி, தோசைக்கு உலக அளவில் வரவேற்பு உள்ளது. இந்திய உணவை நம் முன்னோர்கள் நமக்கு கொடுத்துள்ளனர். பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட உணவு உடலுக்கு நல்லதல்ல.

### பிரதமரின் கனவு

இளைஞர்கள் கல்வியில் அதிக ஆர்வம் மிக்கவர்களாக இருக்க வேண்டும். மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களும் தொடர்ந்து கற்று கொண்டே இருக்க வேண்டும். பணம் சம்பாதிப்பது மட்டும் குறிக்கோளாக கொள்ளக் கூடாது என்பது அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும். ஜனநாயக நாட்டில் மக்கள்தான் எஜமானர்கள். அவர்களை காத்திருக்க வைக்க கூடாது.

தகவல் தொழில்நுட்பத்தை படிப்பில் மட்டுமல்ல மக்கள் வாழ்க்கைக்கும் கொண்டு வர வேண்டும். அதுதான் நமது

களையும் தாய்மொழியில் நன்கு பிரதிபலிக்கலாம். இன்று கூகுள் வேகமாக வளர்ந்து வருகிறது. அதில் அனைத்து தேடல்களும் கிடைக்கிறது. இருந்தாலும் அது குருவாகாது. எனவே கற்றுக் கொடுத்த ஆசிரியர்களை மறக்காதீர்கள்.

நான் மாணவ பருவத்தில் இந்திக்கு எதிராக பேசினேன். தற்போது அரசியலில் டெல்லி சென்றபோது அந்த மொழி அறியாமல் தவித்தேன். அதன் பிறகு கற்றேன். எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளுங்கள். ஆனால் தாய்மொழியை மறந்து விடாதீர்கள். தாய் மொழி நமது கண்களை போன்றது. பிற மொழிகள் கண்ணாடியை போன்றது. தேவையான நேரத்தில் மட்டும் கண்ணாடியை அணிய வேண்டும்.

### அனைத்து பாடங்களும் தாய்மொழியில் வர வேண்டும்

மாணவர்கள் கல்வி கற்க எந்த நாட்டிற்கு வேண்டுமானாலும் செல்லலாம். அங்கேயே வேலையும் செய்யலாம். ஆனால் பணத்தை சம்பாதித்து விட்டு தாய் நாட்டிற்கு திரும்பி விட வேண்டும். அந்த பணத்தை வைத்து உங்கள் பெற்றோர், குடும்பத்துடன் சந்தோசமாக வாழலாம். ஒரு மனிதன் தனது வாழ்க்கையில் தாய்–தந்தை, பிறந்த மண், தாய்மொழி, தாய்நாடு, குரு ஆகிய ஐந்தையும் மறக்க கூடாது. இந்தியாவில் அனைத்து பாடங்களும் தாய் மொழியில் வர வேண்டும். உங்கள் எண்ணம் நிறைவேற

னதாக விளங்க வேண்டும்.

## ஒரே உலகம் ஒரே குடும்பம்

உலக அளவில் பொருளாதாரம் வளர்ந்து வரும் நிலையில் இந்தியாவிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியது மிக அவசியம். பிரதமரின் விருப்பப்படி நாட்டில் சீர்த்திருத்தங்களை கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தரமான செயல்களை செய்வதன் மூலமே நாட்டை மாற்றத்துக்கு கொண்டு வர முடியும். இதற்காக ஒவ்வொரு கல்வி நிறுவனமும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

ஒரே உலகம். ஒரே குடும்பம். அதுவே நமது நாட்டின் பாரம்பரியம். இயற்கையை பாதுகாக்க வேண்டும். தகவல் தொழில்நுட்பம் மிக முக்கியமான ஒன்று. எந்த விஷயத்திலும் மக்களை காக்க வைப்பது நோக்கமாக இருக்க கூடாது. மக்களுக்கு அரசிடம் இருந்து கிடைக்கப் பெற வேண்டிய அனைத்து உதவிகளும் சிரமமின்றி கிடைக்க வேண்டும். அதற்கு இணையதள தகவல் தொழில்நுட்பம் உதவுகிறது.

## உலகமே கண்காணிக்கிறது

பல்கலைக்கழகத்தின் அனைத்து நடவடிக்கைகளும் வெளிப்படைத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். அப்போது தான் இங்குள்ள அனைத்தையும் மாணவர்கள் தெரிந்து கொள்ள முடியும். நமது நாட்டில் 65 சதவீத மக்கள் 35 வயதுக்குட்பட்ட இளைஞர்களாக உள்ளனர். வேறு எந்த ஒரு நாட்டிலும் இதுபோன்ற மனிதவளம் இல்லை.

வெளிநாடுகளில் முதியோர்கள் தான் அதிக சதவீதத்தில் உள்ளனர். எனவே தான் இந்தியாவை உலகமே கண்காணித்துக் கொண்டிருக்கின்றது. நாம் புதிய திறமைகளையும். அறிவுத்திறனையும் வளர்த்துக் கொண்டே இருக்கவேண்டும். இந்தியர்கள் என்பதில் இளைஞர்கள் பெருமிதம் கொள்ள வேண்டும். வரும் 15 ஆண்டுகளில் இந்தியா உலகளவில் பொருளாதாரத்தில் 3–வது இடத்திலுள்ள நாடாக மாற வாய்ப்புகள் உள்ளன. பொருளாதாரம், வேலைவாய்ப்பு, தரமான வாழ்வை வாழ்வதற்கான சூழலை உருவாக்க இளைஞர்கள் முயற்சிக்க வேண்டும்.

## கல்வி வேலைவாய்ப்புக்கு அல்ல

கல்வி என்பது வேலைக்காக மட்டுமல்ல. அறிவை வளர்த்துக்கொள்

துறைகளையும் இணையதளத்தில் கொண்டு வந்தால் மக்கள் வரிசையில் நிற்க வேண்டிய அவசியம் இருக்காது.

பல்கலைக்கழகத்தில் உள்ள வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். 800 பல்கலைக்கழகங்களில் ஒரு சில பல்கலைக்கழகங்களே சர்ச்சையில் சிக்குகின்றன. பல்கலைக்கழகம் என்பது கல்வி கற்கும் இடமாக மட்டுமே இருக்க வேண்டும். மற்ற ஒழுங்கீன செயல்களில் ஈடுபட பல்கலைக்கழகம் இடமல்ல.

## தாய்மொழியில் பேசுங்கள்

பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டு வருவதால் மட்டுமே ஒரு குற்றத்தை தடுத்து விட முடியாது. போலீஸ் நிலையங்கள் இருந்தும் திருட்டு நடக்க தான் செய்கிறது. மக்களிடம் மாற்றம் வர வேண்டும். கல்வி முறையில் மாற்றம் வேண்டும். பெண்களை மதிக்க ஆண்களுக்கு சிறுவயதிலேயே கற்றுத்தர வேண்டும். குழந்தைகள் மற்றும் பெண்கள் மீதான பாலியல் கொடுமைகள் கண்டிக்கத் தக்கது. இதில் ஈடுபடும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அவர்களை சட்டத்தின் முன்பு நிறுத்தவேண்டும்.

வீட்டில் அனைவரும் தாய்மொழியில் பேசுங்கள். அம்மா என்று கூறும் போது அது நமது அடிவயிற்றில் இருந்து உணர்வுபூர்வமாக இருக்கும். மம்மி என்று சொல்லும் போது உணர்ச்சியே இருக்காது. எங்கு சென்றாலும் உங்கள் தாய்மொழியை புரிந்துகொள்ளும் இடங்களில் தாய்மொழியையே பேசுங்கள். தாய்மொழியை புரியாதவர்கள் இருந்தால் மட்டுமே வேறு மொழியில் பேசுங்கள்.

## தொன்மையான மொழி தமிழ்

தமிழ் மொழி மிகவும் தொன்மையான, சிறப்பான மொழி. வெளிநாடு சென்ற இடங்களில் தங்களது தாய்மொழியை மறந்து வருகின்றனர். அம்மா, அப்பா என தாய்மொழியிலேயே அழையுங்கள். நமது எண்ணங்களையும் யோசனை

கடுமையாக உழையுங்கள். அப்போது தான் உயர்ந்த இடத்தை பெறலாம்.

ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த அப்துல்கலாம் தனது கடினமான உழைப்பால் நாட்டின் ஜனாதிபதி ஆனார். என்னுடைய குடும்பத்தில் யாரும் அரசியலில் இல்லை. நான் பள்ளி படிப்பை திண்ணை பள்ளியில் தான் படித்தேன். என்னுடைய கடின உழைப்பால் தான் இந்த நிலையை அடைந்துள்ளேன். கடுமையாக உழைத்தால் பிரகாசமான எதிர்காலம் உங்களுக்கு உள்ளது. எனவே உங்களுடைய வாழ்க்கையை வீணாக்காதீர்கள்.

## அரவிந்தர் பெயரில் இருக்கை

கற்கும் போது தவிர மற்ற நேரத்தை சமூகத்தை பற்றி அறிந்துகொள்ள செலவிடுங்கள். கிடைக்கும் நேரங்களில் கிராமப்புறங்களுக்கு சென்று ஏழை, எளிய மாணவர்களுக்கு கல்வி கற்பியுங்கள். புதுவை மத்திய பல்கலைக்கழகம் நாட்டின் சிறந்த கல்வி நிறுவனமாக மாற்றப்படும். அதற்கு தேவையானவற்றை செய்து தர மனித வள மேம்பாட்டுத்துறையிடம் தெரிவிப்பேன். புதுவை பல்கலைக்கழகத்தில் அரவிந்தர் பெயரில் இருக்கைகள் ஏற்படுத்தப்படும். புதுவைக்கு நல்ல கவர்னர், முதல்–அமைச்சர் கிடைத்துள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் புதுவை கவர்னர் கிரண்பெடி, முதல்–அமைச்சர் நாராயணசாமி, கோகுலகிருஷ்ணன் எம்.பி., துணை ஜனாதிபதியின் முதன்மை செயலர் சுப்பாராவ், தலைமைச் செயலாளர் அஸ்வனி குமார், கல்வித்துறைச் செயலாளர் அன்பரசு, போலீஸ் டி.ஜி.பி சுந்தரி நந்தா, பல்கலைக்கழக பதிவாளர் டாக்டர் சசி காந்த தாஸ், தேர்வுக் கட்டுப்பாட்டு ஆணையர்(பொறுப்பு) டாக்டர் சித்ரா மற்றும் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர்.

THE TIMES OF INDIA

7 JULY 2018

PAGE 2

# Mere bill will not rid crime against women, says Naidu

TIMES NEWS NETWORK



K V Perumal

**GLAD TO MEET YOU:** Vice-President M Venkaiah Naidu being greeted by chief minister V Narayanasamy at a function of Pondicherry University on Friday. Also seen is lieutenant governor Kiran Bedi

**Puducherry:** Terming the recent incidents of crime against women as 'shameful and a matter of serious concern', Vice-President M Venkaiah Naidu said a mere bill will not be sufficient to eradicate the social evil.

"A mere bill is not going to solve the problem. What is required is will and administrative skill to kill the social evil. We all have to act collectively to raise awareness against discrimination of the girl child. We must make our youngsters respect women and fellow girl students and treat them with respect. There should be a renewed focus on gender equality and safety of women. And this gender sensitization must begin at home and continue in schools, colleges, and universities," Naidu, who is also the chancellor of Pondicherry University, said while addressing the students during his one-day visit here on Friday.

He said there are reports that local languages are vanishing in the country. "It is not a good sign. Mother tongue is like our eyes and other languages are like our spectacles. I want all the institutions in India, including science, technology, and medicine, to teach in mother tongues of students. The students must master their mother tongue and learn as many languages as possible," he said.

Naidu underlined the need to improve the quality of education in Indian universities. "The faculty must constantly learn and help students to access new resources and update the knowledge base. We should reorient our teaching in a way that it brings out the latent talents of the students. We need to turn our universities into global centres of excellence in innovation and research...our universities must attract knowledge-seekers from all over the world. To achieve this, the professional competence of teachers has to be enhanced in a significant manner," he said.

The Vice-President said universities were not expected to impart quality education alone but develop global citizens who are equipped to deal with contemporary challenges in a competent manner. "Education should bring out the best in man and lead to his enlightenment and empowerment. It is an instrument for socio-economic transformation of the individuals and the society at large. It is a process of continuous learning...It must inculcate strong moral and ethical values and facilitate the holistic development of an individual. Education must build character, competence, and capacity, besides promoting good conduct," he said.

He regretted that even though the higher educational institutions produce lakhs of students each year, a clear majority of them lack employable skills. He pointed out that the 'world of learning' and the 'world of work' was changing at a fast pace, and appealed to the students to be 'adept and adaptable, agile and innovative'.

DECCAN CHRONICLE

7 JULY 2018

PAGE 5

# Reform, perform and transform, Venkaiah tells universities

**KAVYA M | DC**
**PUDUCHERRY, JULY 6**



Vice President M. Venkaiah Naidu on Friday asked universities in the country to reform, perform and transform to become centres of excellence.

Urging the universities to evolve and change according to the need of the changing times, the Vice President also appealed to all the universities in the country to teach various subjects including science and technology in their respective mother tongues. He was addressing the students and faculty of Pondicherry University here.

All universities could teach everything in the mother toungue of the learners and all languages should be learned without any difference, said the Vice President.

He urged students to master the mother language and work hard to aim high to achieve heights.

Highlighting the importance of the need for universities to evolve and change as per the needs of the changing times, he said that the government already focusing on these two aspects through programmes like "Skill India" and "Start Up India"where the universities had the onerous responsibility to create new courses and improve teaching and learning processes to make the students ready to take on the challenges.

Each institution should look into its own functioning and identify areas that require reform and those requiring transformation "in consonance with the Prime Minister's call to reform, perform and transform," he said.

Like in ancient times when India was known as "Vishwaguru", our universities must attract knowledge seeks from all over the world and to achieve this, the professional competence of teachers has to be enhanced significantly, he added.

Stressing the importance of gender sensitisation, the Vice President said that some of the recent incidents of crimes against women are shameful and a matter of serious concern.

"We all have to act collectively to raise awareness against discrimination of the girl child. There should be renewed focus on gender equality and safety of women", the vice-president said Lt Governor Kiran Bedi and Chief Minister V Narayanasamy and Pondicherry University Vice-Chancellor Gurmeet Singh, were among who were present on the occasion.

THE NEW INDIAN EXPRESS

7 JULY 2018

PAGE 2

# Remain rooted to language, culture & tradition but united as a nation: Naidu

EXPRESS NEWS SERVICE
@ Puducherry

VICE President M Venkiah Naidu on Friday called up on the student community to remain deeply rooted to their culture and be united as a nation.

Addressing a gathering at the Pondicherry Central University, the vice president said that students should never forget their country, its people and civilisation and be concerned with incidents that were happening in the country as their own.

Advising students to speak in their mother tongue, Naidu said that mother tongue was like eyes and other languages were like spectacles. However, he encouraged students to learn as many languages as possible.

He said that students have to dream big and aim high, citing the examples of former President APJ Abdul Kalam, Prime minister Narendra Modi and Naidu himself, who had risen from the only educated member in the family to the position of Vice President. As stated by Sri Aurobindo, the love of learning and quest for solutions is what needs to be an integral part of every school, he said.

Naidu also stressed the need to vastly improve the quality of education in the Indian Universities and asked the teachers to keep updating their knowledge.

Asserting the need for gender sensitisation in schools and colleges, Naidu said that some of the recent incidents of crimes against women are shameful and a matter of serious concern. "We all have to act collectively to raise awareness against discrimination of girl children."

He also said that he would take up MHRD ministry for establishing a chair of Sri Aurobindo in Pondicherry University.

LG Kiran Bedi, V Narayansamy and Vice Chancellor Gurmeet Singh were present.

THE HINDU
9 JULY 2018
PAGE 2

CHENNAI THE HINDU
MONDAY, JULY 9, 2018

REPORTER'S DIARY

# Venkaiah's witty side to the fore

## The V-P said just like the CM he had trouble with Hindi


Vice-President Venkaiah Naidu interacting with students at the Pondicherry University. • S.S. KUMAR

Vice-President M. Venkaiah Naidu was at home while addressing the faculty and students of Pondicherry University here recently. Although he highlighted the role of universities in nation-building, as is his wont, he laced his talk with several witty remarks. One such remark was about himself. He was quite frank to point out that he never celebrated his birthday and the New Year.

"I never celebrate my birthday and I also do not celebrate the New Year," Mr. Naidu said.

He said his wife also did not greet him because she was away in Sri Lanka participating in the Ramayana circuit. It was only after the Prime Minister Narendra Modi tweeted the message of his birthday, the news went viral.

In the course of his address, the Vice-President also pointed out that parents must teach children in their mother tongue at home. Instead of teaching the children the words like *Mummy* and *Daddy*, they must acquaint children with the word *Amma*. While the mother tongue is most important, one should also not have any aversion to other languages was his advice.

Mr. Naidu cited his own example when he mentioned the difficulties he faced in Delhi while interacting in Hindi. Same was the case with Chief Minister V. Narayanasamy, he remarked, much to the amusement of the latter.

MAALAI MALAR 6 July 2018 Page 1




புதுவை பல்கலைக்கழத்தில் நடந்த கலந்துரையாடலில் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு உரை நிகழ்த்திய காட்சி.

# புதுவை பல்கலைக்கழகம் நாட்டின் சிறந்த கல்வி மையமாக உருவாக்கப்படும்

## துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு பேச்சு

புதுச்சேரி, ஜூலை. 6–

துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு அரசு முறை பயணமாக இன்று புதுவை வந்தார்.

சென்னையில் இருந்து தனி ஹெலிகாப்டர் மூலம் லாஸ்பேட்டை விமான நிலையத்துக்கு 10.45 மணிக்கு வருகை தந்தார்.

அவரை கவர்னர் கிரண்பேடி, முதல்–அமைச்சர் நாராயணசாமி, முன்னாள் முதல்–அமைச்சர் ரங்கசாமி மற்றும் அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், அரசியல் பிரமுகர்கள் வரவேற்றனர்.

**மாணவர்களுடன் கலந்துரையாடல்**

இதையடுத்து வெங்கையா நாயுடு கார் மூலம் காலாப் பட்டில் உள்ள மத்திய பல்கலைக்கழகத்துக்கு சென்றார்.

அங்குள்ள மாநாட்டு அரங்கில் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், கலந்து கொண்டு மாணவர்களுடன் வெங்கையா நாயுடு கலந்துரையாடினார். மாணவர்கள் கேட்ட பல்வேறு கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார்.

பின்னர் மாணவர்கள் மத்தியில் வெங்கையா நாயுடு உரை நிகழ்த்தினார். அப்போது அவர் பேசியதாவது:–

புதுவை பல்வேறு சிறப்புகளை கொண்ட நகரமாகும். பாரதியார், அரவிந்தர் அன்னை மற்றும் பல்வேறு மகான்கள் வாழ்ந்த புண்ணிய பூமி. இங்கு நான் வந்திருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

புதுவை மத்திய பல்கலைக்கழகம் இயற்கை சூழலுடன் மிக அழகாக அமைந்துள்ளது. நன்கு சுத்தமாக பராமரிக்கப்படுகிறது. மத்திய பல்கலைக்கழகங்களில் சிறந்த கல்வி மையமாக திகழ்ந்து வருகிறது.

**சிறந்த கல்வி மையம்**

இதை மேலும் சிறப்பாக மேம்படுத்த பல்கலைக்கழக துணைவேந்தர் பாடுபட்டு வருகிறார். அவருடைய முயற்சிக்கு உறுதுணையாக இருந்து நாட்டின் சிறந்த கல்வி மையமாக உருவாக அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்குவோம்.

நமது நாடு பல்வேறு சிறந்த பாரம்பரியங்களை கொண்டது. நமக்கென்று கலாச்சாரங்கள் உள்ளன. இயற்கையையும், கலாச்சாரத்தையும் பாதுகாத்து நமது எதிர்காலத்தை உருவாக்கி கொள்ள வேண்டும்.

இவ்வாறு வெங்கையா நாயுடு பேசினார்.

நிகழ்ச்சியில் கவர்னர் கிரண்பேடி, முதல்–அமைச்சர் நாராயணசாமி, பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சி முடிந்ததும் அங்கிருந்து கார் மூலம் வெங்கையா நாயுடு கவர்னர் மாளிகைக்கு திரும்பினார். அங்கு மதிய உணவுக்கு பின் சிறிது நேரம் ஓய்வு எடுத்தார்.

**அடிக்கல்நாட்டு விழா**

இன்று மாலை இந்திய விளையாட்டு ஆணையம் மூலம் கட்டப்பட்டு உள்ள உள் விளையாட்டு அரங்கம் மற்றும் நீச்சல் குளம், விடுதி கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டு விழா ஆகியவை கம்பன் கலையரங்கில் நடைபெறுகிறது. அதில் வெங்கையா நாயுடு பங்கேற்கிறார். இந்த நிகழ்ச்சி முடிந்ததும் கார் மூலம் மீண்டும் லாஸ்பேட்டை விமான நிலையத்துக்கு செல்கிறார். அங்கு ஹெலிகாப்டர் மூலம் சென்னை செல்கிறார்.

**பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்**

துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு புதுவை வருகையையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. அவர் செல்லும் சாலைகளின் இருபுறமும் தடுப்பு கட்டைகள் அமைக்கப்பட்டு 50 அடி தூரத்துக்கு ஒரு போலீசார் நிறுத்தப்பட்டு இருந்தனர்.

நகரில் அரசு சார்பில் துணை ஜனாதிபதியை வரவேற்று அலங்கார வளைவுகளும் ஆங்காங்கே அமைக்கப்பட்டு இருந்தன.

MAALAI MALAR

6 JULY 2018

PAGE 3



புதுவை பல்கலைக்கழக நிகழ்ச்சியில் பங்கேற்ற துணை ஜனாதிபதி வெங்கையாநாயுடு குத்துவிளக்கு ஏற்றி விழாவை தொடங்கி வைத்தார்.

THAMIZH MURASU 6 JULY 2018 PAGE 1

## குடியரசு துணைத் தலைவர்

# வெங்கையா நாயுடு புதுச்சேரி வருகை

**கவர்னர்–முதல்வர் வரவேற்றனர்** **பல்கலை. மாணவர்களுடன் கலந்துரையாடல்**

புதுச்சேரி, ஜூலை 6-

குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு ஒருநாள் பயணமாக இன்று புதுச்சேரி வந்தார். பல்கலைக்கழக மாணவர்களுடன் கலந்துரையாடிய அவர், கம்பன் கலையரங்கில் நடைபெறும் அரசு கட்டுமான அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்றார். அவரது வருகையை யொட்டி புதுவையில் டிஜிபி சுந்தரி நந்தா தலைமையில் உச்சகட்ட பாதுகாப்பு போடப்பட்டிருந்தன.



புதுவை பல்கலைக்கழக மாணவர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்ற துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு குத்துவிளக்கேற்றினார். அருகில் கவர்னர் கிரண்பேடி, முதல்வர் நாராயணசாமி, பல்கலை. துணை வேந்தர் குர்மீத்சிங்.


குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு ஒருநாள் பயணமாக இன்று புதுச்சேரி வந்தார். காலை 10.45 மணிக்கு லாஸ்பேட்டை விமான நிலையத்துக்கு தனி ஹெலிகாப்டரில் வந்தடைந்த அவரை கவர்னர் கிரண்பேடி, முதல்வர் நாராயணசாமி, சபாநாயகர் வைத்திலிங்கம், துணை சபாநாயகர் விபி சிவக்கொழுந்து மற்றும் அமைச்சர்கள் நமச்சிவாயம், நமச்சிவாயம், மல்லாடி கிருஷ்ணாராவ், கந்தசாமி, ஷாஜகான், கமலக்கண்ணன், எதிர்க்கட்சி தலைவர் ரங்கசாமி, எம்பிக்கள் ராதாகிருஷ்ணன், கோகுலகிருஷ்ணன், தலைமை செயலர் அஸ்வனி குமார், மற்றும் காங்கிரஸ், திமுக, அதிமுக, எம்எல்ஏக்கள், அதிகாரிகள், அரசியல் கட்சி பிரமுகர்கள் பூங்கொத்து கொடுத்தும், சால்வை அணிவித்தும் வரவேற்றனர்.

பின்னர் 11 மணிக்கு கார் மூலம் புதுச்சேரி காலாப்பட்டில் உள்ள பல்கலைக்கழகம் சென்றடைந்த வெங்கையா நாயுடு அங்கு மாணவர்களுடன் கலந்துரையாடல் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றினார். அவருடன் மாணவ- மாணவிகள், ஆசிரியர்கள் சிறிதுநேரம் கலந்துரையாடினர். இந்நிகழ்ச்சியில் கவர்னர் கிரண்பேடி, முதல்வர் நாராயணசாமி, பல்கலை.துணைவேந்தர் குர்மீத் சிங் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழக நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு ராஜ்நிவாஸ் திரும்பிய குடியரசு துணைத் தலைவர் அங்கு மதிய உணவு அருந்தினார். பின்னர் சிறிதுநேரம் ஓய்வு எடுத்த வெங்கையா நாயுடு பிற்பகல் 3 மணிக்கு கம்பன் கலையரங்கம் வந்தடைந்தார். அங்கிருந்தபடி இந்திய விளையாட்டு ஆணையம் மூலம் லாஸ்பேட்டையில் கட்டப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கை திறந்து வைப்பதோடு நீச்சல் குளம் மற்றும் வீராங்கனைகள் விடுதி கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இதில் முதல்வர், அமைச்சர்கள், அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அதன்பிறகு மாலை 4 மணிக்கு லாஸ்பேட்டை விமான நிலையம் சென்றடையும் குடியரசு துணைத்தலைவர் அங்கிருந்து ஹெலிகாப்டரில் சென்னை செல்கிறார். அவரது வருகையை யொட்டி புதுவையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. குண்டுதுளைக்காத காரில் குடியரசு துணைத் தலைவர் அழைத்துச் செல்லப்பட்டார்.

ஏர்போர்ட் சாலை, கவர்னர் மாளிகை, கம்பன் கலையரங்கம் செல்லும் வழிகளில் சாலையோர தடுப்பு கட்டைகள் அமைக்கப்பட்டு டிஜிபி சுந்தரி நந்தா தலைமையில் 500க்கும் மேற்பட்ட போலீசார் தீவிர கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.




## Comments (12)

Dr J Subramani · *2 days ago*

Thanks to the Vice Chancellor and his teams for having arranged an inspiring Speech by the Hon. Vice President and for live web casting. The vice president has touched all the needs of the present and future society of India starting with Learning, Earning, Skills, Performance, Preserving Nature by Love and Live, importance of Mother Tongue, Maintaining our culture etc... It is a complete and inspiring speech touching of all concepts for the betterment of Indians and India.

Reply

Nagaraju · *2 days ago*

நல்ல ஒரு புது முயற்ச்சிகளுக்கு வாழ்த்துக்கள்,

Reply

Manjariram · *2 days ago*

Nice coverage.Tq to PU organizing committee and VC sir.

Reply

DINESH KUMAR PANDA · *2 days ago*

Very nice & inspirational speech by our Honourable Vice President of India. I will always remember your precious lines Sir. Thank you so much to all at Pondicherry University for giving me such a opportunity to listen to our Honourable Vice President Sir.

Reply

kanagarathinam · *3 days ago*

very nice speach

Reply

Amrita · *3 days ago*

Great inspirational speech by our respected Vice President of India ,Thanks to our Pondicherry University VC sir,and administration for making this event happen.

Reply

G.SIVARAMAN · *3 days ago*

BEST WISHES. THANKS. BY. G.SIVARAMAN

Reply

Deepak · *3 days ago*

v c sir excellent working done by you

Reply

Vivek · *3 days ago*

Good and great job done by VC and the administration. Hope for the best outcome from the Vice President side to the university.

Reply

G.Gomathy · *3 days ago*

நல்ல ஒரு புது முயற்ச்சிகளுக்கு வாழ்த்துக்கள், தொடருட்டும் நற்பணிகள்!

Reply

Mohd babu Khan · *3 days ago*

Higher Constitutional posted personalty, visited Educational Varsity & interacted face to face to students and authorities. It's a very important step in INDIAN context. Good job initiative by our Respected, VC Sir, & Varsity Administration. Jai Hind, Jai Bharat !!!

Reply

kartik · *3 days ago*

Great initiative by Pondicherry university. Thanks to VC and administration

Reply

## Post a new comment

Enter text right here!